"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி – அல்லிநகரம் ,
நாள் : 16.10.2020.

## நகர்மன்ற அவசர கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 சார்வரி வருடம், புரட்டாசி மாதம் 30-ம் நாள் 16.10.2020-ம் தேதி வெள்ளிக் கிழமை காலை 10.35 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக் கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி

**பொருள் 01 :**

கொரோனா வைரஸ் நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக அரசின் உத்தரவின்படி மூடப்பட்டிருந்த வாரச்சந்தையினை மீண்டும் செயல்பாட்டிற்கு கொண்டு வர அனுமதிக்கப்பட்டுள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை G.O. (Ms) No.541 நாள்: 30-09-2020 மற்றும் வாரச் சந்தை செயல்பாட்டின் போது கடைபிடிக்க வேண்டிய நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் உத்தரவிடப்பட்டுள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அரசாணை G.O. (Ms) No.547, நாள்: 03-10-2020 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் பர்வையிட்டு பதிவு செய்யலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1547
**தீர்மானம் :** பதிவு செய்யப்பட்டது.

**பொருள் 02 :**

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும்

காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2014043 | புதிய பேருந்து நிலையம் அடித்தளப்பகுதி செகண்டரி பிளாக் கடை எண் : 30 | 31-12-2020 முதல் |
| 2 | 125/2014057 | புதிய பேருந்து நிலையம் தரைத்தளம் செகண்டரி பிளாக் கடை எண் : 44 | 31-12-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1548
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி வாரச்சந்தை ஆண்டு குத்தகை இனத்தினை திரு.B.சிலம்பரசன், குத்தகைதாரர் தமக்கு நஷ்டம் ஏற்படுவதால் தொடர்ந்து நடத்த இயலாது என தெரிவித்து 15-10-2020 முதல் நகராட்சி வசம் ஒப்படைத்துள்ளார்.

எனவே நகராட்சி வாரச்சந்தை வசூல் குத்தகை இனத்தினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ளவும், அதுவரையில் துறை மூலம் வசூல் செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று குத்தகையினை கையகப்படுத்தி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1146 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1549
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 04 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி கீழ்கண்ட குத்தகை இனங்கள் குத்தகைதாரர்களால் தொடர்ந்து நடத்த இயலவில்லை என தெரிவித்து ஒப்படைப்பு செய்யும் காலம் வரையிலான குத்தகை தொகை செலுத்தப்பட்டு நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வரிவிதிப்பு எண் | குத்தகை இனம் | காலம் |
|---|---|---|---|
| 1 | 125/2005021 | காமராஜர் பேருந்து முனைய தங்கும் விடுதி கீழ் மேற்கு பக்க கடை எண் : 6 | 31-12-2020 முதல் |

மேற்கண்ட குத்தகை கடையினை நகராட்சி வசம் கையகப்படுத்திடவும், மேலும் புதிதாக பொது ஏலம் கோரி நடவடிக்கை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1550
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 05 :

தேனி-அல்லிநகரம் நகராட்சி பகுதியில் கொசுக்களால் பரவும் டெங்கு, சிக்குன்குனியா போன்ற நோய்களை தடுக்கும் பொருட்டு 86 கொசு ஒழிப்பு பணியாளர்கள் (Domestic Breeding Checkers ) வெளி கொணர்வு முறையில் 06.02.2019-ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட கடந்த 01.03.2019 முதல் 6 மாத காலத்திற்கு Relyon facility services Chennai நிறுவனத்தின் மூலம் பெறப்பட்டு பணி மேற்கொள்ள.பட்டது. தொடர்ந்து மன்ற அனுமதி பெறப்பட்டு பணி நீட்டிப்பு செய்யப்பட்ட பணிக்காலம் வரும் 31.10.2020ஆம் தேதியுடன் முடிவடைகிறது. கொசு ஒழிப்பு பணியாளர்கள் பொதுசுகாதார பணிக்கு அவசியம் தேவைப்படுகிறது. மேலும் கோவிட் - 19 தடுப்பு பணிக்கும் இப்பணியாளர்கள் பயன்படுத்தப்பட்டு வருவதால் பொது சுகாதார அவசியம் கருதி மேலும் பணி நீட்டிப்பு செய்ய வேண்டிய அவசியம் உள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்தரவு வழங்கப்படும் வரையில் ஏக்னவே பணியளர்கள் விநியோகம் செய்யும் நிறுவனமாக

Relyon facility services Chennai நிறுவனம் மூலமாக ஏக்னவே அனுமதிக்கப்பட்ட ஊதிய விகிதத்தில் 86 கொசு ஒழிப்பு பணியாளர்களை பெற்று பணி மேற்கொள்ளவும் அதற்கான மன்றத்தின் அனுமதி செலவின தொகை ரூ.42.00 லட்சத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு** :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 86 DBC பணியாளர்களை தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 143 / 2019 /எச்1)

**தீர்மான எண்:** 1551
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு **1, 2** மற்றும் **3** அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 06 :

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021 ம் ஆண்டின் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.113.69 இலட்சம் மதிப்பீட்டில் சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான அனைத்து பதிப்புகளிலும் தமிழ் மற்றும் ஆங்கில தினசரி நாளிதழில்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்ட நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறை அனுமதி விபரம் | தொகை ( ரூ) |
|---|---|---|---|
| 1 | Ravi Publicity Service , ( Times of India - Tamilnadu, Hidu Tamil Thisai - Tamilnadu ) | தமிழ் வளர்ச்சி ( ம ) செய்தித்துறை (விளம்பரம்) வெளியீட்டு ஆணை எண். 3521 / ஒப்பந்தப்புள்ளி / விளம்பரம் / 2020, நாள். 21.09.2020 | 91822 |

மேற்கண்ட தொகை ரூ.91822/-ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்: 163 / 2018 / இ1

**தீர்மான எண்:** 1552
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு 1) மற்றும் 2) அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 07 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கப்படும் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களை தனியார் வசம் ஒப்படைப்பு செய்து இயக்குதல் மற்றும் பரமரிப்பு பணி மேற்கொள்ளுதல் பணிக்கு 01.10.2020 ம் தேதியில் நடைபெற்ற ஒப்பந்தப்புள்ளியில் தொழில் நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டு தகுதியுடைய ஒரே ஒரு விலை விகித உறை 06.01.2020 அன்று திறக்கப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | வருடம் | ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள தொகை. | கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | திருமதி.T தவமணி , நகராட்சி ஒப்பந்ததாரர் | முதல் வருடம் | 7651607.00 | 0.12% குறைவு |
| | | இரண்டாம் வருடம் | 8034187.00 | |
| | | மூன்றாம் வருடம் | 8435896.00 | |
| | மொத்தம் | | **24121690.00** | |

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் 0.03 % குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ள திருமதி. T.தவமணி நகராட்சி ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் அத்தியாவசியம் கருதி நகர்மன்ற தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 650 / 2020/இ2

**தீர்மான எண்:** 1553
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) , இ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 08 :

தேனி – அல்லிநகரம் நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கப்படும் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களை தனியார் வசம் ஒப்படைப்பு செய்து இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் 01.10.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோர தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் மேற்கொண்டதற்கு கீழ்கண்டவாறு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நாளிதழ் | செய்தி மக்கள் தொடர்பு துறைஅனுமதி விபரம் | பட்டியல் விபரம் | தொகை |
|---|---|---|---|---|
| 1 | தி இந்தியன் எக்ஸ்பிரஸ், சென்னை ( த.நா ) | தமிழ் வளர்ச்சி ( ம) செய்தி ( விளம்பரம்) த்துறை, தலைமைச்செயலகம், சென்னை அவர்களின் வெளியீட்டு ஆணை எண். 3588/ ஒப்பந்தப்புள்ளி/ விளம்பரம் / 2020, நாள்.23.09..2020 | பட்டியல் எண்: RPS/ 20-21/000314..Date. 24.09.2020 | **72188.00** |
| | மாலைமுரசு (த.நா) | | | |

மேற்கண்ட தொகை ரூ.72188/– ஐ ( ரூபாய்.எழுபத்தி இரண்டாயிரத்தி நூற்றி எண்பத்தி இரண்டு மட்டும் ) வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 650/ 2020/இ2

**தீர்மான எண்:** 1554
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 09 :

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள 31 எண்ணிக்கையில் உள்ள ஏர்கண்டிஸ்னர்கள் மற்றும் UPS யூனிட்கள்களை வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்கண்ட 3 நிறுவனங்களில் இருந்து 05.10.2020–ம் தேதியன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. வரப்பெற்ற 3 நிறுவனத்தின் விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரங்கள் ( 1 எண்ணத்திற்கான தொகை விபரம் ) | நிறுவனங்களின் பெயர்கள் மற்றும் விலைப்புள்ளிகளின் விபரம் **( Including GST 18% )** | | |
|---|---|---|---|---|
| | | Mayuraa Home Appliance | R.A.Jeyasudarssan & Co | Bombay Traders |
| 1 | Indoor Coil | 4200 | 4500 | 4600 |
| 2 | Blower | 2200 | 2300 | 2400 |
| 3 | P C Board | 4500 | 4600 | 4700 |
| 4 | Blower Motor | 1500 | 1550 | 1560 |
| 5 | Swing Lever | 900 | 950 | 960 |
| 6 | Display Unit | 850 | 900 | 920 |
| 7 | Swing Motor | 450 | 500 | 550 |
| 8 | Fan Motor Capacitor | 200 | 250 | 270 |
| 9 | Room Sensor | 120 | 130 | 140 |
| 10 | Coil Sensor | 120 | 130 | 140 |
| 11 | Outdoor Unit Coil | 2800 | 3300 | 3400 |
| 12 | Compressor | 15000 | 15100 | 15200 |
| 13 | PCB Board Out door | 6500 | 6600 | 6700 |
| 14 | Outdoor Unit Condensor | 300 | 320 | 330 |
| 15 | Relay Contactor | 450 | 470 | 480 |
| 16 | Fan Blade | 600 | 620 | 630 |
| 17 | Fan Motor | 800 | 850 | 870 |
| 18 | Copper Coil | 950 | 970 | 980 |
| 19 | Condensor Coil | 3200 | 3250 | 3300 |
| 20 | Gas Refilling | 2000 | 2050 | 2080 |
| 21 | Outdoor Unit Complete | 21600 | 22050 | 22100 |
| **Air Conditioner & UPS & Battery AMC I Year Service Manner** | | | | |
| 1 | 31 Nos A/C AMC for 1 Year Labour Service Charge | 64000 ( 4 Times x 16000 ) | 66000 ( 4 Times x 16500 ) | 68000 ( 4 Times x 17000 ) |
| 2 | UPS / Battery Service Work | 14400 ( 12 Times x 1200 ) | 15000 ( 12 Times x 1250 ) | 15600 ( 12 Times x 1300 ) |
| | **Total** | **147640** | **152390** | **155910** |

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளியில் வரிசை எண். 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள Mayuraa Home Appliance, என்ற நிறுவனத்தின் குறைந்த பட்ச விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்

ஆ) இப்பணிக்கான செலவித்தொகையினை இந்நகராட்சி பொதுநிநிதியில் இருந்து மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2334 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1555

**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 10 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் 2020 - 2021-ம் ஆண்டின் ஒருங்கிணைந்த நகர்புற வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.113.69 இலட்சம் மதிப்பீட்டில் தார்சாலை, மழைநீர் வடிகால் மற்றும், பேவர் பிளாச் சாலைப்பணிகள் 07.10.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு 08.10.2020-ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்பட்டது. அதன்படி சாலைப்பணிகள் மேற்கொள்ளுவதற்கு கீழ்கண்ட விலை விகிதத்தின்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | பணிக்கான மொத்த மதிப்பீடு தொகை ( ரூ ) ( வரிகள் நீங்கலாக ) | ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை ( ரூ ) | மதிப்பீட்டை விட கூடுதல் / குறைவு |
|---|---|---|---|---|
| 1 | Thiru.M.Sannasi, No.7, Nethaji Road, Sri Ram Nagar, Periyakulam Road, Theni. | 99,44,934.00 | 1,04,92,685.00 | 5.50 % அதிகம் |
| 2 | Thiru.P.Pandiyaraj, No.4, Jawahar Cross Street, N.R.T. Nagar, Theni | | 1,04,34,450.00 | 4.92 % அதிகம் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலைவிகிதம் கோரியுள்ள Thiru.P.Pandiyaraj, Theni என்ற ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீடை விட 4.92 % கூடுதலாக உள்ளதால், விலை விகிதத்தினை குறைத்து தர கோரியதில், பணியாளர்களின் ஊதியம் மற்றும் கட்டுமான பொருட்களின் விலைவாசி உயர்வின் காரணமாக விலையினை குறைத்து கொடுக்க இயலாது என தெரிவித்துள்ளார்.

மேற்படி பணியானது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதால் தமிழ்நாடு நகராட்சி பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி அலுவலக மதிப்பீட்டினை விட 4.92 % கூடுதலான விலைவிகிதம் கொண்ட ஒப்பந்தப்புள்ளியை மன்றத்தின் முடிவிற்கு அனுப்ப உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி குழு பரிந்துரை செய்துள்ளது அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:—**

அ ) மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை கோரியுள்ள Thiru.P.Pandiyaraj, Theni என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியானது அலுவலக மதிப்பீட்டை காட்டியும் 4.92 % கூடுதலான விலை விகிதத்தை கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை முடிவு செய்வது தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளின் பொறியியல் கையேடு பத்தி 2.7.2-ன்படி நகர்மன்றத்தின் வரம்பிற்கு உட்பட்டு இருப்பதாலும், மற்றும் இப்பணியானது வரும் மழைகாலத்திற்கு முன்பே ஆரம்பித்து முடிக்க வேண்டி உடனடியாக பணி மேற்கொள்ள இருப்பதால் அவசர அவசியம் கருதி மதிப்பீட்டினை விட 4.92 % கூடுதலாக கோரிய ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ ) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்ததாரர் கோரியுள்ள கூடுதல் விலை விகிதத்தினால் ஏற்படும் கூடுதல் செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2139 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1556
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ ) மற்றும் ஆ) அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 11 :</u>**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட அல்லிநகரம் பேருந்து நிறுத்தத்தினை தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் கீழ் புதியதாக கட்டப்படவுள்ளதால் மேற்படி பேருந்து நிறுத்தத்தினை இடித்த வகையில் கட்டிடத்தில் இருந்து அகற்றப்பட்ட இருப்பு பொருட்கள் மீண்டும் பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பதால் அதனை ஏலநிபந்தனைகளுக்கு உட்பட்டு கழிவு செய்வதற்கு 07.10.2020-ம் தேதியன்று ஏலம் நடைபெற்றது. மேற்படி ஏலத்தில் இரண்டு ஏலதாரர்கள் கலந்து கொண்டு கேட்கப்பட்டுள்ள ஏலகேள்விகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | ஏலத்தில் கலந்து கொண்டவர்களின் விபரம் | ஏலக்கேள்வி தொகை ( ரூ ) | உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி விபரம் அதிகம் / குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.ஜி.ஸ்டாலின்,<br>நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 5750 | குறைவு |
| 2 | திருமதி.எஸ்.சிட்டு,<br>நகராட்சி ஒப்பந்ததாரர், தேனி | 6000 | அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

அ) வ.எண் 2 ல் குறிப்பிட்டுள்ள ஏலக்கேள்வியானது உயர்ந்த பட்ச கேள்வியாக இருப்பதால் திருமதி.எஸ்.சிட்டு, என்பவரின் ஏலக்கேள்வி தொகை தொகையினை மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1842 / 2020 / இ1**

**தீர்மான எண்:** 1557
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 12 :</u>

தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்ட குத்தகை கடைகளுக்கான 3 ஆண்ட குத்தகை காலம் 2020-21-ம் ஆண்டில் முடிவடைவதால் அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட குத்தகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து நிர்ணயித்திடவும், மேலும் குத்தகை காலத்தினை மேலும் 3 ஆண்டிற்கு நீட்டிப்பு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எ ண் | வரிவிதிப்பு எண் | குத்தகைதாரர் பெயர் மற்றும் குத்தகை இனம் | தற்போதைய தொகை | 15 % உயர்வு செய்யும் தொகை | புதிதாக நிர்ணயம் செய்யப்படும் தொகை | தற்போதைய குத்தகை காலம் | புதுப்பிக்கப்படும் குத்தகை காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 125/2014057 | K.Mohamed Ismail-NEW BUSSTAND GR.FR-SEC.BLOCK.SHOP.44 | 12,500 | 1,875 | 14,375 | 01-03-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 2 | 125/2018015 | K.ISAKIMUTHU-NEW BUS STAND-GR.FR. MAIN BLOCK-SHOP-2 | 7,101 | 1,065 | 8,166 | 19-07-2017 to 30-06-2020 | 01-07-2020 to 30-06-2023 |
| 3 | 125/2018018 | M.SAKTHI-NEW BUS STAND - VACANT LAND (NEAR POLICE OUTPOST) | 3,950 | 593 | 4,543 | 16-11-2017 to 31-10-2020 | 01-11-2020 to 31-10-2023 |
| 4 | 125/2018019 | M.RAJESHKUMAR-NEW BUS STAND - VACANT LAND (NEAR MOTHER FEEDING ROOM) | 3,950 | 593 | 4,543 | 17-11-2017 to 31-10-2020 | 01-11-2020 to 31-10-2023 |
| 5 | 125/2005029 | R.R.Jayaram Sundar-SHOP -1 - BUSSTAND EAST ROW | 10,862 | 1,629 | 12,491 | 01-04-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 6 | 125/2005030 | R.R.Jayaram Sundar-SHOP -2 - BUSSTAND EAST ROW | 10,862 | 1,629 | 12,491 | 01-04-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 7 | 125/2005041 | A. VEERAPATHIRAN-SHOP -12B-BUSSTAND EAST ROW | 12,244 | 1,837 | 14,081 | 01-02-2018 to 31-01-2021 | 01-02-2021 to 31-01-2024 |
| 8 | 125/2018016 | V.PALPANDIYAN-KAMARAJ BUS STAND EAST SIDE SHOPS NO. 24 ( OLD CLOCK ROOM) | 4,100 | 615 | 4,715 | 21-11-2017 to 31-10-2020 | 01-11-2020 to 31-10-2023 |
| 9 | 125/2018017 | V.RAJA-SHOP -7-GROUND FR-BUSSTAND LODGE-WEST | 5,100 | 765 | 5,865 | 22-11-2017 to 31-10-2020 | 01-11-2020 to 31-10-2023 |
| 10 | 125/2018023 | R.KANNAN-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 16 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| **வ. எண்** | **வரிவிதிப்பு எண்** | **குத்தகைதாரர் பெயர் மற்றும் குத்தகை இனம்** | **தற்போதைய தொகை** | **15 % உயர்வு செய்யும் தொகை** | **புதிதாக நிர்ணயம் செய்யப்படும் தொகை** | **தற்போதைய குத்தகை காலம்** | **புதுப்பிக்கப்படும் குத்தகை காலம்** |
| 11 | 125/2018024 | R.RAVIENDRAKUMAR-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 17 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| 12 | 125/2018025 | R.RAVIENDRAKUMAR-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 18 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| 13 | 125/2018026 | P.ASOKAN-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 19 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| 14 | 125/2018027 | T.BALU-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 20 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| 15 | 125/2018028 | V.SENTHILKUMAR-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 21 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| 16 | 125/2018029 | MUTHUVENGADESH-O B S E-SIDE FIRST FL VACANT PLACE- 22 | 1,000 | 150 | 1,150 | 14-12-2017 to 30-11-2020 | 01-12-2020 to 30-11-2023 |
| 17 | 125/2018001 | B.KANNIAH-WEST SHANDY SHOP - 13 ( NEW BLOCK ) | 2,100 | 315 | 2,415 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 18 | 125/2018002 | N.BASKARN-WEST SHANDY SHOP - 14 ( NEW BLOCK ) | 2,000 | 300 | 2,300 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 19 | 125/2018003 | N.BAHVANANTHAN-WEST SHANDY SHOP - 15 ( NEW BLOCK ) | 2,000 | 300 | 2,300 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 20 | 125/2018004 | C.KANNAN-WEST SHANDY SHOP - 16 ( NEW BLOCK ) | 2,050 | 308 | 2,358 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 21 | 125/2018005 | S.MAHALINGAM-WEST SHANDY SHOP - 17 ( NEW BLOCK ) | 4,100 | 615 | 4,715 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 22 | 125/2018006 | S.MAHALINGAM-WEST SHANDY SHOP - 18 ( NEW BLOCK ) | 4,050 | 608 | 4,658 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 23 | 125/2018007 | U.PARAMASIVAM-WEST SHANDY SHOP - 19 ( NEW BLOCK ) | 2,070 | 311 | 2,381 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 24 | 125/2018008 | D.KUMARAVEL-WEST SHANDY SHOP – 20 ( NEW BLOCK ) | 2,050 | 308 | 2,358 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| **வ. எ ண்** | **வரிவிதிப்பு எண்** | **குத்தகைதாரர் பெயர் மற்றும் குத்தகை இனம்** | **தற்போதைய தொகை** | **15 % உயர்வு செய்யும் தொகை** | **புதிதாக நிர்ணயம் செய்யப்படும் தொகை** | **தற்போகைய குத்தகை காலம்** | **புதுப்பிக்கப்படும் குத்தகை காலம்** |
| 25 | 125/2018009 | M.KANNAN-WEST SHANDY SHOP - 21 ( NEW BLOCK ) | 2,050 | 308 | 2,358 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 26 | 125/2018010 | M.KANNAN-WEST SHANDY SHOP - 22 ( NEW BLOCK ) | 1,960 | 294 | 2,254 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 27 | 125/2018011 | R.GNANASEKARAN-WEST SHANDY SHOP - 23 ( NEW BLOCK ) | 1,920 | 288 | 2,208 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 28 | 125/2018012 | T.SELVAM-WEST SHANDY SHOP - 25 ( NEW BLOCK ) | 2,150 | 323 | 2,473 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |
| 29 | 125/2018013 | T.SELVAM-WEST SHANDY SHOP - 26 ( NEW BLOCK ) | 2,250 | 338 | 2,588 | 23-08-2017 to 31-03-2020 | 01-04-2020 to 31-03-2023 |

**அலுவலக குறிப்பு :**

அ) அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ஆ) மேற்கண்ட குத்தகை இனங்களுக்கு தற்போதைய வாடகை தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்து நிர்ணயித்திட மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட குத்தகை இனங்களுக்கான குத்தகை காலத்தினை மேலும் 3 ஆண்டிற்கு நீட்டிப்பு செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 1944 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1558
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அ , ஆ மற்றும் இ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 13 :

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனையம் முதல் தளம் காலியிடம் : 3 (வரிவிதிப்பு எண் : 125/2017031) திரு.எம்.பிரேம் ஆனந்த் என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.M.பிரேம் ஆனந்த் த/பெ.முத்தையா மற்றும் திருமதி.P.மகாலட்சுமி க/பெ.பால்பாண்டி இருவரும் கூட்டாக தொழில் செய்த நிலையில், திரு.M.பிரேம் ஆனந்த் என்பவர் குடும்ப சூழ்நிலை காரணமாக கூட்டுத் தொழிலிருந்து விலகிக் கொள்வதாக கூட்டு வியாபார விலகல் பத்திரம் வழங்கியுள்ளார். அதன் அடிப்படையில் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திருமதி.P.மகாலட்சுமி என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி காமராஜர் பேருந்து முனையம் முதல் தளம் காலியிடம் : 3 (வரிவிதிப்பு எண் : 125/2017031) திரு.M.பிரேம் ஆனந்த் என்பவர் பெயரிலிருந்து திருமதி.P.மகாலட்சுமி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2464/ 2020 / அ3**

**தீர்மான எண்:** 1559
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 14 :

தேனி- அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான காமராஜர் பேருந்து முனையம் முதல் தளம் காலியிடம் : 1 (வரிவிதிப்பு எண் : 125/2017029) திரு.R.ரமேஷ் என்ற பெயரில் உள்ளது.

மேற்கண்ட கடையில் திரு.R.ரமேஷ் த/பெ.ரெங்கராஜ் மற்றும் திருமதி.M.விஜயலட்சுமி க/பெ.முத்து வெங்கடேஸ்வரன் இருவரும் கூட்டாக தொழில் செய்த

நிலையில், திரு.R.ரமேஷ் என்பவர் தொடர்ந்து கடையை நடத்த இயலாததால் மேற்கண்ட குத்தகை இனத்தினை தமது பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட கோரி திருமதி.M.விஜயலட்சுமீ என்பவரால் உரிய கட்டணம் செலுத்தப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்: 92 நாள்: 03-07-2007-ன் படி காமராஜர் பேருந்து முனையம் முதல் தளம் காலியிடம் : 1 (வரிவிதிப்பு எண் : 125/2017029) திரு.R.ரமேஷ் என்பவர் பெயரிலிருந்து திருமதி.M.விஜயலட்சுமி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்திட மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் : 2463/ 2020 / அ3**

**தீர்மான எண்:** 1560
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 15 :

தேனி - அல்லிநகரம் நகராட்சி மேற்கு சந்தை பகுதியில் முன்பொது ஏலம் மூலம் கடைகள் கட்ட அனுமதிக்கப்பட்டு 28-12-2016 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் கடை எண்: 28 திருமதி.ஆர்.எஸ்.லட்சமி என்பவர் கோரிய உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையினை ஏற்று நகர்மன்ற தீர்மானம் எண்: 68 நாள்: 11-01-2017-ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட கடைகளுக்கான கட்டுமான பணிகள் மேற்கொண்ட நிலையில், மேற்கண்ட இடம் தொடர்பாக அருள்மிகு கௌமாரியம்மன் கோயில் நிர்வாகத்தால் ஆட்சேபணை செய்யப்பட்டு மாவட்ட நீதிமன்றத்தில் O.S. No.66/2019 வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது.

இந்நிலையில் நகராட்சிக்கு வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டும், மேலும் அதே அளவுள்ள கடைகள் என்பதை கருத்தில் கொண்டும், மேற்கு சந்தை G பிளாக் கிழக்கு பார்த்த 3வது வரிசையில் அதே அளவில் புதிதாக கட்டப்பட்டு காலியாக உள்ள கடை எண்: 7 ஒப்படைப்பு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண் :1107 / 2020 / அ3**

**தீர்மான எண்:** 1561
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 16 :</u>**

தேனி - அல்லிநகரம் நகராட்சியில் ரூ.68.83 கோடி மதிப்பீட்டில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தினை கீழ்கண்ட நிதிப்பகிர்வில் மேற்கொள்ளுவதற்கு அரசாணை ( நிலை ) எண்.12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( கு.வ.2 ) நாள். 28.01.2013-ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

**நிதிப்பகிர்மான விபரம் :-**

| வ. எண் | நிதிப்பகிர்வு விபரம் | தொகை ( ரூ ) கோடியில் |
|---|---|---|
| 1 | Loan From TNUDF III and TNUDF ( 60% ) | 41.30 |
| 2 | Grant From TNUDF III ( 30% ) | 20.65 |
| 3 | ULB Contribution ( 10 % ) | 6.88 |
| | **Total** | **68.83** |

அதன்படி, இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் முடிவுற்ற நிலையில் இத்திட்டத்தினை 21.02.2020-ம் தேதியன்று நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனை தொடர்ந்து தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராம குடிநீர் திட்ட கோட்டம், தேனி கடித எ©. Lr.No : F. WSIS to .Theni - Allinagaram Mpty / DO / RWS / Theni / 2020 / Dated : 23.05.2020-ம் தேதிய கடிதத்தில் குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கான மதிப்பீட்டு தொகையில் SCADA பணிக்கு ரூ.118.10 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், தற்போது SCADA பணிகள் மேற்கொள்ளுவதற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மேற்படி பணிகள் செய்வதற்கு ரூ.439.74 இலட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டு, கூடுதலாக செலவாகும் தொகை ரூ.321.64 இலட்சத்தினை தேனி – அல்லிநகரம் நகராட்சி வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தேனி – அல்லிநகரம் நகராட்சியின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்களின்

நலனுக்காகவும் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளான **1)** புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு TNUDP - III and TNUDF நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட கடன் தொகை ரூ. 41.30 கோடி, **2)** பாதாளச்சாக்கடை திட்டப்பணிக்கு TNUDP - III மூலமாக பெறப்பட்ட கடன் தொகை ரூ. 12.51 கோடி மற்றும் **3)** புதிய பேருந்து நிலைய திட்டப்பணிக்கு TNUDF மூலமாகவும் பெறப்பட்ட கடன் தொகை ரூ. 8.50 கோடி என மொத்த கடன் தொகை ரூ.62.31 கோடிக்கு மாதந்தோறும் நகராட்சி மூலம் தவணைத் தொகைகள் செலுத்துவதற்கு போதுமான அளவில் நிதி வசதியில்லாத காரணத்தினால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், கிராம குடிநீர் திட்ட கோட்டம், தேனி அலுவலகம் தெரிவித்துள்ள SCADA பணிக்கான கூடுதல் மதிப்பீட்டு தொகை ரூ.321.64 இலட்சத்தினை இந்நகராட்சி வழங்குவதற்கு அரசின் ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் ரூ.321.64 இலட்சத்தினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4484 / 2013 / இ1**

**தீர்மான எண்:** 1562
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ அனுமதிக்கப்பட்டது.

## <u>பொருள் 17 :</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணி செயல்படுத்துவதற்கு கீழ்கண்ட நிதிப்பகிர்வில் பணி மேற்கொள்ள அரசாணை ( நிலை ) எண்.12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( கு.வ.2 ) நாள். 28.01.2013-ன்படி நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது.

**நிதிப் பகிர்மான விபரம் :-**

| **வ.எண்** | **நிதி விபரம்** | **தொகை ரூ ( கோடியில் )** |
|---|---|---|
| 1 | Loan from TNUDP - III and TNUDF ( 60 % ) | 41.30 |
| 2 | Grant from TNUDP - III ( 30 % ) | 20.65 |
| 3 | Urban Local body Contribution ( 10 % ) | 6.88 |
| **மொத்தம்** | | **68.83** |

அதன் அடிப்படையில் மேற்கண்ட பணிகளை இரண்டு சிப்பங்களாக ( 2 - Package ) பிரித்து இப்பணியினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் மேற்கொள்ளப்பட்டது. பணிகள் முடிவு பெற்று நிலையில் தொடர் பராமரிப்பு பணிக்காக மேற்படி திட்டத்தினை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திடம் இருந்து நகராட்சி வசம் 21.02.2020-ம் தேதி முதல் பெற்றுக்கொள்ளப்பட்டது. மேற்படி பணிகள் முடிவுற்று நகராட்சியின் தொடர் பராமரிப்புக்காக எடுக்கப்பட்டு 8 மாதங்கள் ஆன நிலையில் இப்பணிக்கு நாளது தேதிவரை தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு பட்டியல் தொகைக்கு மொத்தம் **ரூ.63.99** கோடிகள் கீழ்கண்ட விபரப்படி தொகைகள் வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சி வழங்கிய தொகை விபரம் :-**

| **வ.எண்** | **நிதி விபரம்** | **தொகை ரூ ( கோடியில் )** |
|---|---|---|
| 1 | Loan from TNUDP - III and TNUDF ( 60 % ) | 40.67 |
| 2 | Grant from TNUDP - III ( 30 % ) | 19.63 |
| 3 | Urban Local body Contribution ( 10 % ) | 3.69 |
| | **மொத்தம்** | **63.99** |

**தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு நகராட்சி இன்னும் வழங்க வேண்டிய தொகை விபரம் :-**

| **வ.எண்** | **நிதி விபரம்** | **தொகை ரூ ( கோடியில் )** |
|---|---|---|
| 1 | Loan from TNUDP - III and TNUDF ( 60 % ) | 0.63 |
| 2 | Grant from TNUDP - III ( 30 % ) | 1.02 |
| 3 | Urban Local body Contribution ( 10 % ) | 3.19 |
| | **மொத்தம்** | **4.84** |

இந்நகராட்சியில் உள்ள பொதுமக்கள் அனைவரும் நாள்தோறும் நபர் ஒன்று 135 லிட்டர் வீதம் குடிநீர் பெறும் வகையில் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்காக TNUDP - III and TNUDF நிறுவனத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்ட கடன் தொகை ரூ. 41.30 கோடியினை அந்நிறுவனத்திற்கு வட்டியுடன் சேர்த்து திரும்ப செலுத்துவதற்கும், இப்பணிக்கு நகராட்சியின் பங்குத்தொகை ரூ.6.88 கோடி செலவு செய்வதற்கும் மற்றும் O & M பணிகள் ஆகியவற்றினை மேற்கொள்ளுவதற்கு அரசாணை ( நிலை ) எண்.12 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( கு.வ.2 ) நாள். 28.01.2013 -ல் கீழ்கண்ட விபரப்படியான குடிநீர் கட்டணங்களை வசூல் செய்வதற்கு நிர்ணயித்துள்ளது.

<u>குடிநீர் கட்டணங்களின் விபரம்</u>

| வ. எண் | பயன்பாட்டின் விபரம் | தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டணங்கள் | | புதிய குடிநீர் கட்டணங்கள் | |
|---|---|---|---|---|---|
| | | **Slab Rate / Month ( Rs )** | **Slab Rate / Quarter ( Rs )** | **Slab Rate / Month ( Rs )** | **Slab Rate / Quarter ( Rs )** |
| 1 | Domectic | 50 | 150 | 235 | 705 |
| 2 | Non - Domectic | 100 | 300 | 705 | 2115 |
| 3 | Industrial | 100 | 300 | 705 | 2115 |

மேற்படி நிர்ணயித்துள்ள குடிநீர் கட்டணங்கள் அரசாணை பத்தி எண். 4–ல் இத்திட்டத்தை ஒரு நிலைப்பாட்டில் நிதி ரீதியாக நிலையானதாக மாற்ற TNUIFSL - ஆல் உருவாக்கியுள்ளது என்றும் இத்திட்டம் அனுமதி பெற்ற நேரத்தில் தேனி – அல்லிநகரம் நகராட்சி இக்கடனை திரும்ப செலுத்தும் அளவிற்கு வருமானமில்லாதது எனவும் பொதுமக்களிடமிருந்து குடிநீர் கட்டணமாக இத்தொகையினை நடைமுறையில் வசூலிக்க சாத்தியமில்லை என தெரிவித்தது. மேலும் வருங்காலத்தில் குடிநீர் திட்டப்பணிக்காக பெறப்படும் கடன் தொகையில் ஒரு பகுதியை குறைப்பதற்கு கூடுதல் மானியமாக தொகை வழங்குமாறு கோரியதைக் சுட்டிக்காட்டப்பட்ட விபரம் மேற்படி அரசாணையில் தெரிவித்துள்ளது.

அதன் படி தேனி – அல்லிநகரம் நகராட்சியின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்களின் நலனுக்காகவும் செயல்படுத்தப்பட்ட திட்டப்பணிகளான **1)** புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டப்பணிக்கு TNUDP - III and TNUDF நிறுவனத்தில் இருந்து பெறப்பட்ட கடன் தொகை ரூ. 41.30 கோடி, **2)** பாதாளச்சாக்கடை திட்டப்பணிக்கு TNUDP - III மூலமாக பெறப்பட்ட கடன் தொகை ரூ. 12.51 கோடி மற்றும் **3)** புதிய பேருந்து நிலைய திட்டப்பணிக்கு TNUDF மூலமாகவும் பெறப்பட்ட கடன் தொகை ரூ. 8.50 கோடி என மொத்த கடன் தொகை ரூ.62.31 கோடிக்கு மாதந்தோறும் நகராட்சி மூலம் தவணைத் தொகைகள் செலுத்துவதற்கு போதுமான அளவில் நிதி வசதியில்லாத காரணத்தினால் மேற்படி திட்டங்களுக்கு பெற்றப்பட்ட கடன் தொகைகளின் சுமையினை குறைக்கும் வகையில் அரசின் ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் ரூ.25.00 கோடியினை முழுமானியமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க கோரி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 4484 / 2013 / இ1**

**தீர்மான எண்:** 1563
**தீர்மானம் :** அலுவலகக்குறிப்பு அ அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் 18 :</u>**

தேனி–அல்லிநகரம் நகராட்சி பகுதியில் குடிநீர் விநியோகம், தெருவிளக்கு பராமரிப்பு மற்றும் பாதாளச்சாக்கடை பராமரிப்புக்காக தமிழ்நாடு மின்சாரவாரியத்தால் மாதம் சுமார் ரூ. 30.50,000/– க்கு மின் கட்டணம் பட்டியல் வழங்கப்படுகிறது. தற்போது பிப்ரவரி–2019 முதல் 31.10.2020 வரை இந்நகராட்சி தமிழ்நாடு மின் வாரியத்திற்கு செலுத்தவேண்டிய மின்கட்டணம் ரூ. 5.98 கோடி நிலுவையாக உள்ளது. ஆனால், புதிய குடிநீர்த்திட்டம், புதிய பேருந்து நிலையம் மற்றும் பாதாளச்சாக்கடைத்திட்டத்திற்கு டுபிட்கோ மற்றும் டுபிசல் நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட கடன் தொகையில் 31.10.2020 ம் தேதி அன்றைய நிலவரப்படி ரூ. 54.00 கோடி நிலுவையாக உள்ளது. ஒரு மாதத்திற்கு அசல் மற்றும் வட்டி ரூ. 46.98 இலட்சம் நகராட்சி மூலம் செலுத்தவேண்டியுள்ளது. அதன்படி இந்நகர்மன்ற தீர்மான எண்.1042. நாள்17.09.2019 ன் படி மின் கட்டணம் செலுத்துவதற்கு ரூ. 1.70 கோடி மான்யமாக வழங்கக்கோரி , இவ்வலுவலக கடித. ந. எண். 5282/2009/இ2. நாள். 01.10.2019 ன்படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் மதுரை அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு தீர்மான நகலுடன் உரிய வரைவு அனுப்பப்பட்டது. ஆனால், தேனி – அல்லிநகரம் நகராட்சிக்கு இதுவரை மேற்கண்ட மான்யத்தொகை ரூ. 1.70 கோடி வழங்கப்படவில்லை. மேலும், தற்சமயம் கொராணா வைரஸ் தொற்று நோய் காலமாக உள்ளதால் வரி வசூல் செய்வதில் மிக சிரமமாக உள்ளது. பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு போதுமான நிதி ஆதாரம் இல்லை. எனவே, நகராட்சி நிதிநிலை கருத்தில் கொண்டு மேற்கண்ட மின் கட்டண நிலுவைத்தொகையான ரூ 5.98 கோடியை மின் வாரியத்திகு செலுத்தும் பொருட்டு மான்யமாக வழங்கிட கோரி ,நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு உரிய வரைவு மற்றும் அதன் தீர்மான நகல் அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலகக்குறிப்பு</u>** :-

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 5282 / 2009 /இ2

**தீர்மான எண்:** 1564
**தீர்மானம்  :** அலுவலகக்குறிப்பு அ அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 19 :

தேனி-அல்லிநகரம் நகராட்சியின் 33 வார்டுகளிலும் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பறைகள் மற்றும் சமுதாய கழிப்பறைகள் முழுமையாக கட்டி முடிக்கப்பட்டு பொதுமக்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதன் அடிப்படையில் இந்நகராட்சி பகுதி முழுவதும் 2018-ஆம் ஆண்டு முதல் திறந்த வெளி மலம் கழித்தல் இல்லாத நகராட்சியாக அரசால் சான்றளிக்கப்பட்டுள்ளது. (ODF) அதனை மேம்படுத்தி நகர் முழுவதும் தொடர் கண்காணிப்பு செய்யப்பட்டு தூய்மையாக பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் திறந்தவெளி சிறுநீர் கழித்தல் இல்லாமலும் பராமரிக்கப்பட்டு வருகிறது. எனவே இவ்வாண்டும் திறந்த வெளியில் மலம் கழித்தல் மற்றும் சிறுநீர் கழித்தல் இல்லாத நகராட்சி என சான்றிதழ் பெற (ODF +) பொதுமக்களின் கருத்துகளையும் ஆட்சேபனைகளையும் தெரிவிக்கும் பொருட்டு உரிய அறிவிப்பினை தினசரி பத்திரிக்கையில் வெளியிடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.2594/2020/எச்1**

**தீர்மான எண்:** 1565
**தீர்மானம்  :** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி – அல்லிநகரம் நகராட்சி